# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# *30.09.2022* ம் தேதி நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்
# தீர்மான நகல்

*1.* இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் ***2022***-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது *(க.எண்.1464/2016/சி1)*

**அலுவலகக்குறிப்பு** *:* மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். *244***

*2.* இந்நகராட்சி உதவிப்பொறியாளர் மற்றும் பொறியாளர் *(*பொ*)* அவர்களின் ஆகஸ்ட் ***2022***-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது *(க.எண்.1464/2016/சி1)*

**அலுவலகக்குறிப்பு** *:* மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். *245***

*3.* இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் ***2022***-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது *(க.எண்.1464/2016/சி1)*

**அலுவலகக்குறிப்பு** *:* மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். *246***

*4.* இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் ***2022***-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது *(க.எண்.1464/2016/சி1)*

**அலுவலகக்குறிப்பு** *:* மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். *247***

*5.* நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை மற்றும் வியாபார சான்று வழங்க கீழ்காணும் அட்டவணைப்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.*20789/2021/UPA1* நாள்.*16.06.2022* இல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்படி பணியினை மேற்கொள்ளவும் நகர்மன்றத்தீர்மான எண். *186* நாள்.*30.06.2022* இல் நகர்மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து *04.07.2022* இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இணையம் மற்றும் தபால் மூலம் ஒரே நிறுவனத்தாரின் ஒரே ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றதால் *13.07.2022* இல் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. *13.07.2022* இல் தபால் மூலமாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் இணையவழியாக முழு வடிவிலான ஒரு ஒப்பந்தப்புள்ளியும் (MIRIFICIAL CAREERS PVT LTD) COIMBATORE மூன்று தாள்கள் மட்டுமே உள்ள (BHARATHI HR CONSULTANCY, CHENNAI ) ஒரு ஒப்பந்தப்புள்ளியும் வரப்பெற்றது.

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகளும் *13.07.2022* பிற்பகல் *3.35* மணியளவில் திறக்கப்பட்டது. மேற்படி தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகளை கூராய்வு கமிட்டி மூலம் திறனாய்வு சரி பார்க்கப்பட்டு அறிக்கை சமர்பிக்க கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.*1378/2022/எப்1* நாள்.*13.07.2022* இல் கூராய்வு கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. மேற்படி, தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகளை கூராய்வு கமிட்டியால் *15.07.2022* இல் திறனாய்வு சரி பார்க்கப்பட்டு MIRIFICIAL CAREERS PVT LTD COIMBATORE நிறுவனத்தாருக்கு *82*

மதிப்பெண்களும், BHARATHI HR CONSULTANCY, CHENNAI நிறுவனத்தாருக்கு 33 மதிப்பெண்களும் வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வழிகாட்டுதல்படி குறைந்தபட்சம் 60 மதிப்பெண்கள் இருந்தால் மட்டுமே அந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி MIRIFICIAL CAREERS PVT LTD COIMBATORE நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து மேற்படி இரண்டு நிறுவனத்தாரின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளியை 20.07.2022 பிற்பகல் 3.00 மணியளவில் திறக்க மேற்படி நிறுவனகங்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1378/2022/எப்1 நாள்.15.07.2022 இல் கடிதம் அனுப்பப்பட்டது. 20.07.2022 அன்று மேற்படி நிறுவனங்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு கீழ்கண்டவாறு விலைவிகிதம் குறிப்பிடப்பட்டுள்ளது.

| SL.NO | COMPANY NAME | COST PER VENDOR |
|---|---|---|
| 1. | Mirificial Careers Pvt Ltd Ramanathapuram Coimbatore | Rs.700 (3,70,700) |
| 2. | Bharathi Hr Consultancy, Chennai | Rs.850 ( 4,20,850) |

மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளில் Mirificial Careers Pvt Ltd Coimbatore நிறுவனத்தாரின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி தொகை மற்றதை காட்டிலும் குறைவாக உள்ளது. எனவே, மேற்படி விலைவிகித ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று Letter Of Acceptance அனுப்பப்பட்டு மேற்படி நிறுவனத்தாரால் கூடுதல் வைப்புத்தொகை ரூ.10,000/- 27.07.2022 இல் செலுத்தப்பட்டது. மேற்காணும் கணக்கெடுப்பு பணியினை உடன் மேற்கொள்ளப்பட்டு உரிய காலக்கெடுவில் முடிக்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டதையடுத்து அவசர அவசியம் கருதியும் இப்பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டும் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் முன் அனுமதியுடன் Mirificial Careers Pvt Ltd Coimbatore நிறுவனத்தாருக்கு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண்.1378/2022/எப்1 நாள்.29.07.2022 இன் படி வேலை உத்திரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.
(ந.க.எண்.1378/2022/எப்1)

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அங்கீகரிக்கலாம்.
**அங்கீகரிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.248**

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாந்தி நகர் மனைப்பிரிவில் பொது இடமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை ஆக்கிரமிப்பு செய்வது தொடர்பாக கோபி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.337/2009 இன் படி தொடரப்பட்ட வழக்கில் வரப்பெற்ற தீர்ப்பின் மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் S.A.No.458/2018 இல் M.P.No.1/2015 இன் படி நகராட்சியால் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் நகராட்சியின் சார்பாக எதிர்வழக்காட அரசு வழக்கறிஞர் திரு.என்.சுப்பராயலு அவர்களை நியமனம் செய்யப்பட்டு மேற்படி வழக்கிற்கு எதிர் வாதுரை தயார் செய்து (Counter Affidavit) சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்காடப்பட்டு வந்தது. இந்நிலையில் ஏழாவது வாதி திரு.கே.பி.கந்தசாமி வாரிசு சான்று காலதாமதமாக சமர்பிக்கப்பட்டதால் மேற்படி வழக்கானது C.M.P.S.R.No.616/2022 என எண்ணிடப்பட்டு 12.08.2020 விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மீள நகராட்சியின் சார்பாக எதிர் வாதுரை தயார் செய்து (Counter Affidavit) சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதன் இறுதி விசாரணை 25.08.2022 இல் மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே இதற்கான கட்டணம் ரூ.15000/- வழங்குமாறுஅரசு வழக்கறிஞர் திரு.என்.சுப்பராயலு அவர்களால்

*13.08.2022* ஆம் நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.*15000/-* வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** *:* மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.*249***

*7.* இந்நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண்.*2* ராமர் எக்ஸ்டன்சன் *- 6* இல் உள்ள பொது கழிப்பிடத்தில் உள்ள *Air compressor* மோட்டார் பழமை வாய்ந்ததாக இருப்பதால் , தொடர்ந்து பழுதடைந்து வருகிறது.

எனவே , மேற்படி ஆழ்துளை கிணற்று *Submergible motor* அமைத்து தண்ணீர் வசதி செய்ய ஆகும் மதிப்பீட்டு தொகை .ரூ.*1,25,000/-* ஆகும். (ஒரு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்*)* இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.*1682/2022/*இ*1)*

**அலுவலகக்குறிப்பு** *:*

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

***1* மற்றும் *2* அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.*250***

*8.* கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண்.*4* , விவேகானந்தர் வீதியில் உள்ள சமுதாய கூடத்திற்கு தண்ணீர் வசதி செய்யும் பொருட்டு , புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து , மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்ய ஆகும் மதிப்பீட்டு தொகை .ரூ,*2,00,000/-*(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் *)* இத்தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.களண்.*1689/2022/*இ*1)*

**அலுவலகக்குறிப்பு** *:*

1. மன்றம் அனுமதி அளிக்கலாம் .
2. மேற்காண் செலவின தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம் .

***1* மற்றும் *2* அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.*251***

*9.* கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு எண்.*28* முத்து நகர் , வீதியில் அமைந்துள்ள பொது மக்கள் நலனுக்காக, கட்டப்பட்டுள்ள நகர்புற நல வாழ்வு மையம் கட்டிடத்திற்கு தண்ணீர் வசதி , சாய் தளத்திற்கு கைப்பிடி *(Hand rails )* ஜன்னல்களுக்கு *MS.Grill* போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் மதிப்பிட்டு தொகை ரூ.*2,50,000 /-* ஆகும். (இரண்டு இலட்சத்து ஐம்தாயிரம் மட்டும்*)* இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது**. (**ந.க.எண்.*1690/2022/*இ*1***)**

**அலுவலகக்குறிப்பு** *:*

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

***1* மற்றும் *2* அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.*252***

*10.* இந்நகராட்சிக்கு சொந்தமான வாகன எண். *TN 36 AC 6320* க்கு டயர் தேய்மானம் ஆகிவிட்டதால், புதிய டயர் பொருத்துவதற்கு *29.08.2022* ஆம் தேதியன்று விலைப்பட்டியல் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. கோபி மோட்டார்ஸ் *J.J* நகர் கோபி - ரூ. *31,400/-*
2. சக்தி டயர்ஸ் , *59* பஜனை கோவில் வீதி , கோபி –ரூ,*32,200/-*
3. டயர் மார்ட் , *14* , பஜனை கோவில் வீதி , கோபி –ரூ,*33,000/-*

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1757/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

வரப்பெற்ற விலைப்புள்ளிகயில் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள கோபி மோட்டார்ஸ் J.J நகர் கோபி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீரிக்கலாம் .

**கோபி மோட்டார்ஸ் ஜெ.ஜெ.நகர் கோபி –ன் ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.253**

11. இந்நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண்.21 மணிமேலை வீதி (படையாச்சி மாரியம்மன் கோயில் அருகில்) மற்றும் வார்டு எண்.26 சிவசண்முகம் வீதி -2, தேர்வீதி , வார்டு எண்.28 ஆகிய இடங்களில் உள்ள சிறுமின்விசை பம்பு தண்ணீர் தொட்டி பழுதடைந்துள்ளது.

மேற்படி பழுதினை சரிசெய்ய புதிதாக 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டி அமைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.35,000/-க்கு ஆகும் இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1786/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

***1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.254***

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான செங்கலரை கிராமத்தில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள HT உயர் அழுத்த மின் இணைப்பு எண்.10 ற்கு கூடுதல் மின் மோட்டர் 100 HP இயக்கத்திற்கு தேவையான 74 KVA மின் பளு வழங்க கோரி மேற்பார்வை பொறியாளர் , தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் அளிக்கப்பட்டது. விண்ணப்பம் ஏற்று கீழ்கண்டுள்ள வகையில் கேட்பு பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

1. பதிவு கட்டணம் + மதிப்பீடு கட்டணம் - 60380 /-
2. வளர்ச்சி கட்டணம் + மீட்டர் பாதுகாப்பு கட்டணம் –ரூ.151089/-

மேற்கண்டுள்ள கட்டணங்கள் நகர்மன்ற தீர்மானம் எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மின்சார வாரியம் கோபி மின் பகிர்மான ஓட்டம் அவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் மன்றப்பொருள் கோரப்படுகிறது. (ந.க.எண்.968/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் பணிகள் அவசியம் முன்னிட்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை ரூ.211469/- செலுத்தப்பட்டுள்ளது மன்றம் அங்கீரிக்கலாம் .
3. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் .

***1. அனுமதிக்கப்பட்டது,2. அங்கீகரிக்கப்பட்டது, 3. அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.255***

13. இந்நகராட்சிக்கு சொந்தமான வாகன எண் TN 36 AJ 2139 வாகனத்தின் முன்புறம் உள்ள மண் அகற்றும் பக்கெட்டின் இரும்பு பிளேட் தேய்ந்து உள்ளதை மாற்றி புதியதாக பொருத்தி கொள்ளும்

பணிக்கு *05.09.2022* இல் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனங்களின் விபரம் | விலைப்புள்ளி தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | M/s. ஸ்ரீ மகாலட்சுமி ஒர்க்ஸ் ஷாப்,<br>749, ஊத்துக்குளி ரோடு,<br>குன்னத்தூர் – 638103 | 9,676/- |
| 2 | M/s. ஸ்ரீ கெஜலட்சுமி இண்டஸ்டீரிஸ்,<br>88/162, கருங்கல் மேடு,<br>பெருமாநல்லூர் ரோடு, குன்னத்தூர் – 638103 | 9,794/- |
| 3 | M/s. ஸ்ரீ பழனி ஆண்டவர் ஹைட்ராலிக் ஒர்க்ஸ்,<br>13/24 C, பெருமாநல்லூர் ரோடு,<br>குன்னத்தூர் – 638103 | 9,912/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி விலை விகிதம் ரூ.*9,676/-* ஐ அளித்துள்ள வரிசை எண். *1* இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமான *M/s.* ஸ்ரீ மகாலட்சுமி ஒர்க்ஸ் ஷாப், *749*, ஊத்துக்குளி ரோடு, குன்னத்தூர் – *638103* அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். *(ந.க.எண்.1402/2022/எச் 1)*

**அலுவலக் குறிப்பு** : அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய நிறுவனத்தினரிடம் பணிமேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம் .

***M/s* ஸ்ரீ மகாலட்சுமி ஒர்க் ஷாப் விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**பணி மேற்கொள்ளப்பட்டது அங்கீகரிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.*256***

*14.* மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஈரோடு மாவட்டத்திற்கு வருகை புரிந்து *25.08.2022* மற்றும் *26.08.2022* ஆகிய நாட்களில் பல்வேறு திட்ட பணிகளை துவக்கி வைக்கும் விழா நடைபெற்றது. கூட்டம் நடைபெற்ற இடத்தில் தற்காலிக கழிப்பறை வாகனங்களை அமைப்பதற்கு இந்நகராட்சிக்கு பொறுப்பு வழங்கப்பட்டதன் பேரில் இரண்டு தற்காலிக கழிப்பறை வாகனங்களை சேலம் மாநகராட்சியில் இருந்து கொண்டுவருவதற்கு இரண்டு டிராக்டர்களை வாடகைக்கு அமர்த்தும் பணிக்கு *23.08.2022* ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனங்களின் விபரம் | விலைப்புள்ளி தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | M/s. ஸ்ரீ சக்தி முருகன் டிராக்டர்ஸ்,<br>கோபி ரோடு, குன்னத்தூர். | 33,340/- |
| 2 | M/s. அம்மன் டிராக்டர்ஸ்,<br>பூலாங்குளம்,<br>குன்னத்தூர். | 33,540/- |
| 3 | M/s. ஸ்ரீ மகாலட்சுமி ஒர்க்ஸ் ஷாப்,<br>749, ஊத்துக்குளி ரோடு,<br>குன்னத்தூர் – 638103 | 32,700/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி விலை விகிதம் ரூ.32,700/- ஐ அளித்துள்ள வரிசை எண். 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமான M/s. ஸ்ரீ மகாலட்சுமி ஒர்க்ஸ் ஷாப், 749, ஊத்துக்குளி ரோடு, குன்னத்தூர் – 638103 அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1733/2022/எச் 1)

**அலுவலக் குறிப்பு** : 1. அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் வழுங்கிய M/s. ஸ்ரீ மகாலட்சுமி ஒர்க்ஸ் ஷாப், குன்னத்தூர் நிறுவனத்தினரிடமிருந்து டிராக்டர்களை பெற்று பணிமேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்

2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

***1.ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2.அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.257***

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு MCC (2.00 MT) கட்டும் பணி ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு 29.08.2022 தேதியன்று மாலை முரசு செய்திதாளில் வெளியிடப்பட்டுள்ளது. மாலை முரசில் இச்செய்தியினை வெளியிட்டமைக்கான செலவு தொகை ரூ.9450/-க்கு வரப்பெற்றது. அத்தொகையினை செய்தி மக்கள் தொடர் அலுவலர் ஈரோடு அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1253/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம் .
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம் .

***1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.258***

16. இந்நகராட்சி பகுதியில் 6/2021 முதல் 7/2022 வரை கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொண்டமைக்கு பணிகளின் சுருக்கம் மாலை முரசு செய்திதாளில் 31.08.2022 ல் வெளியிடப்பட்டது,

இச்செய்தியினை மாலை முரசில் வெளியிடப்பட்டமைக்கு செலவின தொகை ரூ.9985 /-க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஈரோடு அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அதன் விவரம்

| வ.எண். | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021-2022 | ரூ.500.00 |
| 2. | 15வது நிதிக்குழு மானியம் 2020-21 | ரூ.76.65 |
| 3. | 15வது நிதிக்குழு மானியம் 2021-22 | ரூ.153.55 |
| 4. | சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம்2021-2022 | ரூ.65.00 |
| 5. | கலைஞர் நகபுற மேம்பாட்டு திட்டம் 21-22 | ரூ.238.30 |
| 6. | தூய்மை பாரத இயக்கம் (நகர்புறம்) 2021-2022 | ரூ.36.28 |
| 7. | நமக்கு நாமே திட்டம் 2021-2022 | ரூ.232.00 |
| | **பெரு மொத்தம்** | **ரூ.1301.78** |

(ந.க.எண். 1980/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

***1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.259***

*17.* இந்நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம் *(SBM)* (நகர்புறம்*)* 2.0 2022-23 ல் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 14.09.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.*17* உரக்கிடங்கில் நுண் உர செயலாக்க மையம் அமைத்தல் | 23,00,000 | E.விஸ்வநாதன் ஒப்பந்ததாரர் | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | S.ஜெயபிரகாஸ் ஒப்பந்ததாரர் | 1.80 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

ந.க.எண். 1725 / 2022/இ*1*

<u>**அலுவலகக்குறிப்பு *:-***</u>

.

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்படி பணிகளில் வ.எண்.*1* -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.E.விஸ்வநாதன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

***1.*அனுமதிக்கப்பட்டது.**

***2.*வரிசை எண்.*1* க்கு *E.* விஸ்வநாதன் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மன்றத்தீர்மான எண்.*260***

*18.* இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 15.09.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.*18,* பஜனை கோவில் வீதியிலுள்ள கழிப்பறைக்கு *Septic tank* கட்டுதல் மற்றும் பராமரிப்பு பணி செய்தல் | 4,00,000 | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 0.25 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.60 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொறியாளர் குடியிருப்பிற்கு பராமரிப்பு பணி செய்தல் | 70,000 | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 0.15 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.10 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

ந.க.எண். 1632/2022/ இ*1*

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

மன்றம் அனுமதிக்கலாம் .

1. மேற்படி பணிகளில் வ.எண்.1 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. மேற்படி பணிகளில் வ.எண்.2 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**வரிசை எண்.1 மற்றும் 2 க்கு M/s சஞ்சய் எலெக்ட்ரிக்கல்ஸ் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.261**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் 75வது ஆண்டு சுதந்திர தினம் விழா ஆகஸ்ட் 15 அன்று கொண்டாடப்பட்டது. அலுவலக கட்டிடம் முன்புறம் முகப்பு முழுவதும் வண்ண சீரியல் லைட் அலங்கார தோரண விளக்குகளால் ஆகஸ்ட் 13 முதல் 15 வரை மூன்று நாட்கள் அலங்கரிக்கப்பட்டது. ஆகஸ்ட் 15 அன்று நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் பள்ளி குழந்தைகளுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழாவிற்கு ஆடியோ சிஸ்டம், போடியம் மைக் ஆகியவை அமைக்கப்பட்டது. மேற்படி பணிகளுக்கு உள்ளூர் விலைப்புள்ளி 11.08.2022 அன்று பெறப்பட்டது. இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

1. நந்தினி ஆடியோ சிஸ்டம் , கோபிசெட்டிபாளையம் – ரூ.23700/-
2. பரமேஸ்வரி ஆடியோ சிஸ்டம் கோபிசெட்டிபாளையம் – ரூ.26600/-

இதில் குறைந்த விலை விலைப்புள்ளியாக நந்தினி ஆடியோஸ் சிஸ்டம் கோபிசெட்டிபாளையம் அவர்கள் வழங்கியுள்ளார்கள். மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1873/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்படி பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செய்வதை மன்றம் அனுமதிக்கலாம் .
3. மேற்படி பணிக்கான செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் .

***1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.262***

20. மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிக்கு 25.08.2022 அன்று வருகை புரிந்தார்கள். கோபிசெட்டிபாளையம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகள் துவக்க விழா நடைபெறுவதை முன்னிட்டு கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலக கட்டிடம் முன்புறம் முகப்பு முழுவதும் வண்ண சீரியல் செட் அலங்கார தோரண விளக்குகளால் 24.08.2022 முதல் 26.08.2022 வரை மூன்று நாட்கள் அலங்கரிக்கப்பட்டது. மேற்படி பணிகளுக்கு விலைப்புள்ளி 22.08.2022 அன்று பெறப்பட்டது. இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. நந்தினி ஆடியோ சிஸ்டம் , கோபிசெட்டிபாளையம் –ரூ.19200/-
2. பரமேஸ்வரி ஆடியோ சிஸ்டம் கோபிசெட்டிபாளையம் –ரூ.21600/-

இதில் குறைந்த விலை விலைப்புள்ளி நந்தினி ஆடியோஸ் சிஸ்டம் கோபிசெட்டிபாளையம் அவர்கள், வழங்கியுள்ளார்கள்.மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.கஎண்.1873/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்படி பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செய்வதை மன்றம் அனுமதிக்கலாம் .
3. மேற்படி பணிக்கான செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் .

***1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.263***

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பழைய லாரி நிலைய IUDP கடை எண். 2 (வரி விதிப்பு எண். 057/BD01/00013) திரு.கே.முருகபிரகாஷ் த/பெ. கருப்பணன் என்பவருக்கு 01.10.2019 முதல் 30.09.2022 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி கடையின் குத்தகை உரிமம் 30.09.2022 ந் தேதியுடன் முடிவடைகிறது. தற்போது மேற்படி கடையின் குத்தகைதாரர் திரு.கே.முருகபிரகாஷ் த/பெ. கருப்பணன் என்பவர், தனது கடையின் தற்போதைய வாடகை ரூ.8,100/-லிருந்து 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து, குத்தகை உரிமத்தை மேலும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்தல் செய்து வழங்கக்கோரி 22.09.2022ந் தேதியில் உரிமம் புதுப்பித்தல் விண்ணப்பம் சமர்பித்துள்ளார், மேலும் உரிமம் புதுப்பித்தல் கட்டணம், வித்தியாச வாடகை வைப்புத்தொகை மற்றும் ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் புகைப்படத்துடன் கூடிய ஒப்பந்தப்பத்திரம் சமர்பித்துள்ளார்.

எனவே பழைய லாரி நிலைய IUDP கடை எண். 2 ( வரி விதிப்பு எண். 057/BD01/00013) ற்கான தற்போதைய வாடகை ரூ.8,100/- லிருந்து 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து, 01.10.2022 முதல் 30.09.2025 வரை மூன்றாண்டுகளுக்கு திரு.கே.முருகபிரகாஷ் த/பெ. கருப்பணன் என்பவருக்கு குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2575/2017/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

***அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.264***

22. இந்நகராட்சி எல்லைக்குள் வார்டு 28 வாரச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள ஆடு வதைக்கும் இடம் (Slaughter House) –இல் உள்ள ஆழ்துளை கிணறு பயன்படாத நிலையில் உள்ளது, அதில் உள்ள குழாய்கள் துரு பிடித்து மின் மோட்டார் கிணற்றில் உள் விழுந்த நிலையில் உள்ளதால் , மேற்படி ஆழ்துளை கிணற்றினை சுத்தம் செய்து புதியதாக மின் மோட்டார் மற்றும் அதன் குழாய் மற்றும் கேபிள் மாற்றி தண்ணீர் வசதி செய்ய ஆகும் செலவின தொகை .ரூ.65000/- ஆகும்.இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம் .
2. மேற்காண் செலவின தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

***1, மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.265***

23. இந்நகராட்சி எல்லைக்குள் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில்

1. பேருந்து நிலையம் 500 LPH Ro Plant
2. தாய் சேய் நல விடுதி 250 LPH Ro Plant
3. அம்மா உணவகம் 250 LPH Ro Plant

ஆகிய இடங்களில் மற்றும் அலுவலக பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில்

1. நகராட்சி அலுவலகம் 250 LPH Ro plant ல் சுத்திகரிப்பு கருவி மூலம் சுத்திகரிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பபட்டு வருகிறது. மேற்படி சுத்திகரிப்பு கருவியினை தனியார் மூலம் 2022-2023 ம் ஆண்டு பராமரிப்பு செய்திட ஆகும் செலவினம் ரூ.1,50,000/ க்கு அனுமதி

மற்றும் அதன் உதிரிபாகங்கள் மதிப்பீடு விலை விகிதத்தில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதினை சரிசெய்து கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.2,00,000 / ஆகும். ஆக மொத்த செலவின தொகை ரூ.3,50,000/- ஆகும். இச்செலவின தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம் .
2. மேற்காண் செலவின தொகையினை குடிநீர் நிதியில் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

***1, மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.266***

24. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.1 ஸ்ரீராமபுரத்தில் அமைந்துள்ள சமுதாய கழிப்பறையின் Septic tank மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எனவே , அதன் மேல்மூடியை அகற்றி கழிவுகளை அகற்றவும் மற்றும் மேல் மூடியை புதியதாக அமைக்கவும் Septic tank –ஐ உயரப்படுத்தவும் , ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,20,000 /- ஆகும். இ.ச்செலவின தொகையினை நகராட்சியின் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
(ந.க.எண்.1687/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம் .
2. மேற்படி செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

***1, மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.267***

25. கோபிசெட்டிபாளையம் நகராட்சியிலிருந்து , புதிய குடிநீர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குடிநீர் உந்து குழாய் மூலம் நகரில் உள்ள 10 மேல்நிலை தொட்டிகளுக்கும் , குடிநீர் உந்தப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது.

எனவே கோபி நகராட்சியில் ஏற்கனவே உள்ள குடிநீர் திட்டம் -1 , திட்டம் -2 மற்றும் திட்டம் -3 ஆகிய மூன்று திட்டத்தின் மின் மோட்டார்கள் இயக்கப்படுவதை நிறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே மேற்படி திட்டம் -1 ன் மூலம் லக்கம்பட்டி பேரூராட்சிக்கு வழங்கப்படும் குடிநீர் நிறுத்தப்பட்டுள்ளது. என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.
(ந.களண்.920/2022/இ1 )

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

**பதிவு செய்யப்பட்டது, மன்றத்தீர்மான எண்.268**

26. இந்நகராட்சியின் ராமர் எக்ஸ்டென்சன் பகுதியில் உள்ள மக்கும் குப்பைகளை அரைத்து உரம் தயார் செய்யும் நுண் உரக்கூடத்தில் (Micro Composting Centre) கழிவுகளை துகள்களாக அரைக்கும் இயந்திரத்திற்கு சுழலும் சக்கரம், பிளேடுகள், கன்வேயர் பெல்ட் மற்றும் ஸ்டார்டர் புதியதாக பொருத்தும் பணிக்கு 20.09.2022 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனங்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ.) | |
|---|---|---|---|
| | | விவரம் | தொகை |
| 1. | ECO ENVIRONS SOLUTIONS, 20/2, INDIRAGANTHI STREET, PALAIYAPALAYAM, ERODE – 638011 | 1. அரைக்கும் இயந்திரத்தின் சுழலும் சக்கரம் மற்றும் 6 பிளேடுகள் புதியது பொருத்துதல் (Inclu. GST and Labour) | ரூ. 41,989/- |
| | | 2. கன்வேயர் பெல்ட் மாற்றுதல் (Inclu. GST and Labour) | ரூ. 40,000/- |

| | | | |
|---|---|---|---|
| | | 3. ஸ்டார்ட்டர் பாக்ஸ் மாற்றி வயரிங் செக்கப் செய்து தருதல் (Inclu. GST and Labour) | ரூ. 4,650/- |
| | | **மொத்தம்** | **ரூ. 86,639/-** |
| 2. | FINE AIR SYSTEM,<br>72, RANGANATH STREET,<br>VENKITAPURAM,<br>COIMBATORE – 641013 | 1. அரைக்கும் இயந்திரத்தின் சுழலும் சக்கரம் மற்றும் 6 பிளேடுகள் புதியது பொருத்துதல் (Inclu. GST and Labour) | ரூ. 42,280/- |
| | | 2. கன்வேயர் பெல்ட் மாற்றுதல் (Inclu. GST and Labour) | ரூ. 41,765/- |
| | | 3. ஸ்டார்ட்டர் பாக்ஸ் மாற்றி வயரிங் செக்கப் செய்து தருதல் (Inclu. GST and Labour) | ரூ. 4,750/- |
| | | **மொத்தம்** | **ரூ. 88,795/-** |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ECO Environs Solutions, 20/2, Indira Ganthi Street, Palaiyapalayam, Erode - 638011 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திரிடம் இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.834/2022/எச் 1)

**அலுவலக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.269**

27. இந்நகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (National Urban Live Hood Mission) மூலம் கட்டப்பட்டு மொடச்சூர் வாரச் சந்தையில் உள்ள நகர்புறத்தில் உள்ள வீடற்றவர்கள் தங்கும் விடுதியினை (Shelter for Urban Homeless People) Rural Education Environment Development & Multipurpose Society (REEDMAS) 121/1, கலராமணி மொடச்சூர், கோபிசெட்டிபாளையம் என்னும், தன்னார்வ அமைப்பினருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் அனுமதி அளிக்கப்பட்டு மேற்காணும் தங்கும் விடுதி நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தற்போது மேற்காண் நிர்வகிக்கும் பணிக்கான அனுமதி காலம் 31.08.2022 உடன் முடிவடைகிறது. எனவே, மேற்படி தங்கும், விடுதியினை நிர்வகித்தல் மற்றும் பராமரித்தல் பணியினை சேவை மணப்பான்மையோடு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் வழிக்காட்டுதலின்படி ஓராண்டு காலத்திற்கு இலவசமாக நடத்திட விருப்பம் உள்ள தன்னார்வலர் அமைப்பினை விளம்பரம் மூலம் தேர்வு செய்து நிர்வகித்தல் பணியினை 01.10.2022 முதல் 30.09.2023 வரை ஒப்படைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1508/2021/எச்1)

**அலுவலக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு பராமரிப்பு செலவினம் NULM நிதியில் பெற்று செலவழிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.270**

28. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 22.09.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான மொடச்சூர் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் தரை ஓடு ,UPVC கதவு , ஜன்னல் மற்றும் மின் உபகரணங்கள் அமைக்கும் பணி | 4,30,000 | **R.மாணிக்கம் ஒப்பந்ததாரர்** | 0.30 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர் | 1.50 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான முருகன்புதூர் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் புதியதாக அமைக்கப்பட்ட கூடுதல் வகுப்பறைகள் கட்டிடத்தில் கைப்பிடிகள் , சரிவு தளம் மற்றும் மின் வசதிகள் செய்தல் | 1,90,000 | **V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | R.மாணிக்கம் ஒப்பந்ததாரர் | 1.10 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

ந.க.எண். *1414/2019/இ1*

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

.மன்றம் அனுமதிக்கலாம் .

1. மேற்படி பணிகளில் வ.எண்.*1* -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.R.மாணிக்கம்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. மேற்படி பணிகளில் வ.எண்.*2* -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**வரிசை எண்.*1* க்கு *R.* மாணிக்கம் - ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**வரிசை எண்.*2* க்கு *V.* தங்கராஜ் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**மன்றத்தீர்மான எண்.*271***

*29.* இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் பராமரிப்பில் உள்ள *Front End Loader* வாகனம் *TN 36 AJ 2139* தற்போது *1650* மணி நேரம் இயக்கப்பட்டு உள்ளதால் அவ்வாகனத்திற்கு இஞ்சின் ஆயில், கீர் ஆயில், கிரவுன் ஆயில், ஹைட்ராலிக் ஆயில், பில்டர்கள் போன்றவற்றை புதியதாக மாற்றி ஆயில் சர்வீஸ் செய்ய வேண்டியுள்ளது. இப்பணிக்கு மகேந்திரா நிறுவனத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட சர்வீஸ் மையமான *M/s.*செந்தூர் டிராக்டர்ஸ், கோபிசெட்டிபாளையம். அவர்களிடம் விலைமதிப்பீடு பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட சர்வீஸ் மையமான செந்தூர் டிராக்டர்ஸ், கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் ஆயில் சர்வீஸ் செய்து கொள்ளவும் இப்பணிக்கான செலவினம் ரூ.*24200/-* ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. *(ந.க.எண். 1402 / 2022/எச்1)*

**அலுவலகக்குறிப்பு** : *1.* மன்றம் அனுமதிக்கலாம்.
*2.* மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

***1* மற்றும் *2* அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.*272***

*30.* இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் மூலம் நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதாரப் பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் கிருமிநாசினி பொருட்களான நீர்த்த சுண்ணாம்புத் தூள், பிளீச்சிங் பவுடர், கருப்பு பினாயில், கழிவறைகளை சுத்தம் செய்யும் ஆசிட் போன்றவற்றின் இருப்பு குறைவாக உள்ளதால் எதிர் வரும் அக்டோபர் *2022* ஆம் மாதம் முதல் மார்ச் *2023* வரையிலான காலத்திற்கு தேவையான கிருமிநாசினி பொருட்கள் மற்றும் தூய்மைப்பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய தளவாட சாமான்கள் போன்றவற்றை ரூ.*5.00* இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.*(ந.க.எண். 1966 / 2021/எச்1)*

**அலுவலகக்குறிப்பு** : *1.* மன்றம் அனுமதிக்கலாம்.
*2.* மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

***1* மற்றும் *2* அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.*273***

*31.* இந்நகராட்சியின் மூலம் வீடு வீடாக கழிவுகள் சேகரிக்கும் பணிக்கு உபயோகப்படுத்தப்படும் பேட்டரியினால் இயங்கும் வாகனங்களுக்கு மின்கலம் மின்னூட்டத்திற்கான *10* சார்ஜர்களில் *(Chargers)* பழுது ஏற்பட்டுள்ளதால் அச்சார்ஜர்களில் *Mass Kit, Condenser,* மற்றும் *Diode* போன்றவற்றை புதியதாக

மாற்றி பழுது சரிசெய்து கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ10,000/- ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1967/ 2022/எச்1)

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.274**

32. இந்நகராட்சிக்கு சொந்தமான விவேகானந்தர் வீதி பகுதியில் உள்ள நகராட்சி பொது கழிப்பிடத்தில் கழிவு நீர் வெளியேறும் குழாய் உடைந்துள்ளது. கழிவு நீர் வெளியேறும் குழாய்-னை புதிதாக 300 மீட்டர் நீளத்திற்கு அமைக்க அகும் உத்தேச செலவினம் ரூ.3.80 இலட்சம் ஆகும். இச்செலவின தொகையினை நகராட்சியின் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1976/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம் .

2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.275**

33. இந்நகராட்சிக்கு சொந்தமான MUDF Complex கைப்பிடி சுவர் மற்றும் கூறை பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. பழைய தடுப்பு சுவர் –னை இடித்து புதிதாக கைப்பிடி சுவர் மற்றும் கூரை பழுது பார்க்க உத்தேச செலவின தொகை. ரூ.4.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1977/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு** :1. மன்றம் அனுமதி அளிக்கலாம் .

2.மேற்காண் செலவின தொகையை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.276**

34. இந்நகராட்சியின் காட்டு வலவு, அன்பு நகர் , நாய்க்கன் காடு மற்றும் வேலப்பன் வீதி ஆகிய பகுதிகளில் Pipe culvert (7Nos) அமைப்பதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000 /- ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம் .

2.மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.277**

35. கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்திற்கு (நகர்மன்ற தலைவர் அறையில்) 50 எண்ணிக்கையிலான பிளாஸ்டிக் சேர் மற்றும் Aluminum Ladder விநியோகம் செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.65000/-இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1979/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம் .

2.மேற்காண் செலவின தொகையை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.278**

*36.* இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.*28* ல் கங்கவார் வீதியில் இரண்டு *Pipe Culvert* மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்பட வேண்டியுள் ளது. மேற்படி பணியை மேற்கொள்ள அகும் உத்தேச செலவினம் ரூ.*3,00,000 /-* இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** *: 1.* மன்றம் அனுமதி அளிக்கலாம் .

*2.* மேற்படி செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

***1* மற்றும் *2* அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.*279***

*37.* கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு *B,* பிளாக்-*23,* நகரளவை எண்.*63/30* இல் *1300* சதுர மீட்டர் *(0.32 ¼* ஏக்கர்*)* *(*கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.*5* இல் அமைகிறது*)* பரப்பு மனையிடத்தில் *4 (*நான்கு*)* குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.*649/2022/*ஈமா*2* நாள்.*16.06.2022* இல் ம.வ./ஈ.மா எண்.*197/2022* என எண்ணிடப்பட்டு உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து மேற்படி உத்தரவுடன் இணைத்து வரப்பெற்ற வரைபடத்தின் குறிப்பிட்டுள்ளபடி மனை உட்பிரிவில் எல்லைக்குள் அமையும் மூலை முடுக்கு பரப்பு *01.125* ச.மீ இடத்தினை நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய நகர்மன்ற தீர்மான எண்.*204* நாள்.*29.07.2022* இல் நகர்மன்றம் ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து மேற்படி மூலை முடுக்கு இடத்தை கோபிசெட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தின் ஆவண எண்.*3273/2022* நாள்.*06.09.2022* இன் படி பத்திரம் பதிவு செய்யப்பட்டு திரு. *M.* ஆறுமுகம் என்ற மனுதாரரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுதாரரால் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட இடத்தினை ஆணையர் கோபிசெட்டிபாளையம் நகராட்சி என்ற பெயரில் கோபி வட்டாட்சியர் அவர்களின் உட்பிரிவு உத்தரவு எண்கன.*2022/10/31/000218SD* நாள்.*22.09.2022* இன் படி உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரால் மனை பிரிவு அமைக்க கட்டணம் ரூ.*30,000,* மனை அபிவிருத்திக் கட்டணம் ரூ.*3000/-* மனைப்பிரிவு கட்டணம் ரூ.*1000/-* ஆக மொத்தம் ரூ.*34,000/-* இந்நகராட்சி கருவூல இரசீது எண்.*0001571* நாள்.*26.09.2022* இன்படி செலுத்தப்பட்டுள்ளது.

எனவே நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதலின் படியும் நகர்மன்றத்தின் ஒப்பு

தலின் பேரிலும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு *B,* பிளாக் *23,* நகரளவை எண்.*63/30* இல் *1300* சதுர மீட்டர் *(0.32 ¼)* ஏக்கர் *(*கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.*05* இல் அமைகிறது*)* பரப்பு மனையிடத்தில் *4* குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான அங்கீகரிக்கப்பட்ட மனை உட்பிரிவு வரைபடம் மாவ/ஈமா எண்.*197/2022* என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டதன் மீது நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** *:-* மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.*280***

*(*ஒப்பம்*)* - என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி